வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ, புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்

நாள் 17.03.2024 ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

- நாடாளுமன்ற மக்களவை தேர்தல் வரும் ஏப்ரல் மாதம் 19ஆம் தேதி தொடங்கி ஜூன் 1ஆம் தேதி வரை 7 கட்டங்களாக நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
- மக்களவை தேர்தலில் ஆள் பலம், பண பலம், வதந்தி, விதி மீறல்கள் ஆகிய 4 அம்சங்கள் பெரும் சவாலாக இருக்கும் என்று தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார் தெரிவித்துள்ளார்.
- புதுச்சேரி மக்களவை தொகுதியில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் தங்களது வேட்பு மனுக்களை வரும் 20ஆம் தேதிமுதல் தாக்கல் செய்யலாம் என்று மாநில தலைமை தேர்தல் அலுவலர் திரு.ஜவஹர் தெரிவித்துள்ளார்.
- உச்ச நீதிமன்ற பதிவேட்டில் இருந்து டிஜிட்டல் வடிவில் பெறப்பட்ட தேர்தல் பத்திரங்கள் குறித்த தகவல்களை தேர்தல் ஆணையம் இன்று தனது இணைய தளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது.

மக்களவை தேர்தல் 1 (16 )

நாடாளுமன்ற மக்களவை தேர்தல் வரும் ஏப்ரல் மாதம் 19ஆம் தேதி தொடங்கி ஜூன் 1ஆம் தேதி வரை 7 கட்டங்களாக நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. 17ஆவது மக்களவையின் பதவிக்காலம் வரும் ஜூன் மாதம் முடிவடைய உள்ள நிலையில் 18ஆவது மக்களவைக்கான தேர்தல் அட்டவணையை தேர்தல் ஆணையம் நேற்று வெளியிட்டது. டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய தலைமை தேர்தல்

ஆணையர் திரு. ராஜீவ் குமார் தேர்தல் தேதிகளை அறிவித்தார். இதன்படி தமிழகம் மற்றும் புதுச்சேரி உட்பட 21 மாநிலங்களில் 102 தொகுதிகளுக்கு வரும் ஏப்ரல் 19ஆம் தேதி முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

2ஆம் கட்டமாக 89 தொகுதிகளுக்கு ஏப்ரல் 26ஆம் தேதியும், 3ஆம் கட்டமாக 94 தொகுதிகளுக்கு மே மாதம் 7ஆம் தேதியும் தேர்தல் நடைபெறவுள்ளது. 4ஆம் கட்டமாக 96 தொகுதிகளுக்கு மே மாதம் 13ஆம் தேதியும், 5ஆம் கட்டமாக 49 தொகுதிகளில் மே மாதம் 20ஆம் தேதியும், 6ஆவது கட்டமாக 57 தொகுதிகளுக்கு மே மாதம் 25ஆம் தேதியும், 7ஆவது மற்றும் இறுதிக்கட்டமாக 57 தொகுதிகளுக்குஜூன் 1ஆம் தேதியும் வாக்குப்பதிவு நடத்தப்பட உள்ளன.

<u>மக்களவை தேர்தல் 2 (17 )</u>

நாடு முழுவதும் ஜூன் 4ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடத்தப்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. நாடாளுமன்ற தேர்தலுடன் ஆந்திரா, ஒடிசா, அருணாசல பிரதேசம், சிக்கிம் ஆகிய மாநில சட்டப்பேரவை தேர்தலுக்காக தேதியையும் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

இதன்படி ஆந்திராவில் ஒரே கட்டமாக மே மாதம் 13ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. ஒடிசாவில் மே மாதம் 13, 20, 25 மற்றும் ஜூன் 1ஆம் தேதிகளில் 4 கட்டமாக தேர்தல் நடைபெறும். சிக்கிம் மற்றும் அருணாசல பிரதேச சட்டப்பேரவைக்கு ஏப்ரல் 19ஆம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ளன. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதை அடுத்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் நாடு முழுவதும் உடனடியாக அமலுக்கு வந்துள்ளதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் ஏப்ரல் 19ஆம் தேதி ஒரே கட்டமாக 40 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம்

தெரிவித்துள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் வருகிற 20ஆம் தேதி தொடங்கவுள்ளது. ஏப்ரல் 19ஆம் தேதி வாக்குப்பதிவு நடத்தப்பட்டு ஜூன்

<u>மக்களவை தேர்தல் 3 (17 )</u>

4ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தலைமை தேர்தல் ஆணையர் தெரிவித்துள்ளார். தேர்தலில் 85 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் 40 சதவிகித உடல் ஊனமுற்றோர் வீட்டிலிருந்தே வாக்களிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மக்களவை தேர்தலுடன் விளவங்கோடு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலும் ஏப்ரல் மாதம் 19ஆம் தேதி நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி விஜயதாரணி ராஜிநாமா செய்ததையடுத்து அத்தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. அதே போன்று பல்வேறு மாநிலங்களில் காலியாகவுள்ள மேலும் 24 தொகுதிகளுக்கான இடைத்தேர்தலும் மக்களவை தேர்தலுடன் சேர்த்து நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

மக்களவை தேர்தலில் நாடு முழுவதிலும் இருந்து 96 கோடியே 80 லட்சம் வாக்காளர்கள் தங்களது வாக்குகளை செலுத்த உள்ளனர். இதில் 49 கோடியே 70 லட்சம் ஆண் வாக்காளர்களும், 47 கோடியே 10 லட்சம் பெண் வாக்காளர்களும். 48 ஆயிரத்து 44 மூன்றாம் பாலினத்தவரும் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். 1 கோடியே 82 லட்சம் முதல்முறை

<u>மக்களவை தேர்தல் 4(17 )</u>

வாக்காளர்களும், 20 முதல் 29 வயதுடைய வாக்காளர்கள் 19 கோடியே 47 லட்சம் பேரும் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் சுமார் 10 லட்சத்து 50 ஆயிரம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்படுவதுடன் 55 லட்சம் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களும் சுமார் ஒன்றரை கோடி ஊழியர்களும் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

<u>மக்களவை தேர்தல் 5 (3 )</u>

ஏப்ரல் 1ஆம் தேதி 18 வயது பூர்த்தியடைவோர் மக்களவை தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றவர்கள் என தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார் தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பாக நாட்டில் எந்தப் பகுதியில் விதிமீறல்கள் நடந்தாலும் அது பற்றி சி-விஜில் செயலியில் புகார் தெரிவிக்கலாம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. அந்தந்த தொகுதிகளுக்கான வேட்பாளர் பற்றிய விபரங்களை வாக்காளர்கள் ஆன்லைனில் தெரிந்து கொள்ளலாம் என்றும் தலைமை தேர்தல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

இத்தேர்தலில் ஆள் பலம், பண பலம், வதந்தி, விதி மீறல்கள் ஆகிய 4 அம்சங்கள் பெரும் சவாலாக இருக்கும் என்று அவர் கூறியுள்ளார். மேலும், உண்மையான தகவல் எது, பொய் எது என்பதை தேர்தல் ஆணைய இணைய தளத்தில் தெரிந்து கொள்ளலாம் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<u>புகார் (7)</u>

மக்களவை தேர்தலையொட்டி வருமான வரித்துறையின் சார்பில் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளது. எந்தவொரு தனி நபரோ அல்லது கட்சியோ, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, பணம் அல்லது இலவச பொருட்களை விநியோகிப்பது பற்றிய புகார்களை தெரிவிக்க விரும்பினால், வருமான வரி

அலுவலகத்திலுள்ள 1800 425 6669 கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் புகார்களை தெரிவிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<u>புதுச்சேரி 1 (18)</u>

2024ஆம் ஆண்டு மக்களவை தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து புதுச்சேரி மக்களவை தொகுதியில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் தங்களது. வேட்பு மனுக்களை வரும் 20ஆம் தேதி புதன்கிழமை முதல் 27ஆம் தேதி புதன்கிழமை வரை தாக்கல் செய்யலாம் என்று மாநில தலைமை தேர்தல் அலுவலர் திரு. ஜவஹர் தெரிவித்துள்ளார். புதுவையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வேட்புமனுக்களை பரிசீலனை செய்ய இறுதி நாள் வரும் 28ஆம் தேதி ஆகும் என்றும், வேட்பு மனுக்களை திரும்பப் பெற வரும் 30ஆம் தேதி  கடைசி தினம் என்றும் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி மக்களவை தொகுதிக்கு ஏப்ரல் மாதம் 19ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும் என்றும், தேர்தலில் பதிவான வாக்குகள் ஜூன் மாதம் 4ஆம் தேதி எண்ணப்படும் என்றும், அவர் கூறினார்.

புதுச்சேரி மக்களவை தொகுதியில் 967 வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும் என்றும், ஒரு சட்டமன்ற தொகுதிக்கு ஒன்று என்ற அடிப்படையில் 30 மகளிர் நிர்வகிக்கும் வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார். இத்தகைய வாக்குச்சாவடிகளில் அரசு பெண் அலுவலர்கள் மட்டுமே பணியில் இருப்பர் என்றும் திரு. ஜவஹர் தெரிவித்துள்ளார்.

<u>புதுச்சேரி 2 (18)</u>

புதுச்சேரி 3 (18)

பாதுகாவலர் அடங்கிய வாக்குப்பதிவு குழுவானது வாக்காளரின் வீட்டிற்குச் சென்று தபால் வாக்குச்சீட்டில் வாக்களிக்கச் செய்து வாக்குப்பதிவின் ரகசியத்தைக் காப்பர்.

மக்களவை தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளது. இதன்படி மாதிரி நடத்தை விதிகள், அனைத்து அரசியல் கட்சிகள், அனைத்து வேட்பாளர்கள், அரசு மற்றும் அரசு அதிகாரிகள், ஊழியர்களுக்கும் பொருந்தும். அரசியல் கட்சிகள் மாதிரி விதிகளுக்கு கட்டுப்பட்டு, பகைமைகள், கசப்புணர்வுகள் இல்லாத மற்றும் கசப்புக்கு இடமளிக்காத சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தல்களை நடத்துவதற்கு தங்கள் ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குழந்தைகளை தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தக்கூடாது என்றும், சமூக வலைதளங்களில் பொய்ச்செய்தியை பரப்பக்கூடாது, ஏடிஎம்-எந்திரங்களில் மாலை 6-மணிக்கு மேல் பணம் நிரப்பக்கூடாது என்பது உள்ளிட்ட கட்டுப்பாடுகளையும் தேர்தல் ஆணையம் விதித்துள்ளது.

புதுச்சேரியில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளதால், பாதுகாப்பு கருதி உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும்

<u>புதுச்சேரி 4 (6)</u>

ஆயுதங்களை வைத்திருப்பதற்கோ அல்லது கொண்டு செல்வதற்கோ தடை விதிக்கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் உத்தரவிட்டுள்ளார்.

புதுச்சேரியில் அனைத்து வகையான மதுபானக் கடைகளும், இரவு 10 மணிக்கு மூடப்பட வேண்டும் என மாநில கலால்துறை உத்தரவிட்டுள்ளது.

<u>தன்கர் (12)</u>

குடிமக்களின் உரிமைகளை மீறாமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பதே குடியுரிமை சட்டத்தின் நோக்கம் என குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார். ஹைதராபாத்தில்

நடைபெற்ற உலகளாவிய ஆன்மிக மகோத்சவ நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், ஆன்மிக பூமி என்ற பெருமையைப் பெற்ற பாரதம் ஆன்மிக வளர்ச்சிக்கான இயற்கையான இடமாகத் திகழ்வதாக குறிப்பிட்டார். இத்தகைய இடத்தில் மட்டுமே தனி நபருடைய மேன்மை, திறமை, மற்றும் நேர்மையைக் கண்டறிய இயலும் என்றும் அவர் தெரிவித்தார். அண்மையில் அமல்படுத்தப்பட்ட குடியுரிமைச் சட்ட திருத்த சாராம்சம் குறித்து எடுத்துரைத்த அவர், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த சட்டத்தை சிலர் அங்கீகரிக்க மறுப்பது துரதிருஷ்டவசமானது என்று குறிப்பிட்டார்.

<u>ஜெய்சங்கர் (11)</u>

சீன உற்பத்திப் பொருட்களை எதிர்கொள்ளும் வகையில் நம் நாட்டின் உற்பத்தி துறையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் ஊடகவியலாளர் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அவர், இது இரு நாடுகளுக்கிடையேயான எல்லைப் பிரச்சனை மட்டுமல்ல, முக்கிய பொருளாதாரப் பிரச்சனைகளும் உள்ளன என்று கூறினார். கடந்த 2020ஆம் ஆண்டு கல்வான் மோதலுக்குப் பின்னர், சீனாவுடனான உறவு மோசமடைந்தாலும் காலப்போக்கில் பதற்றங்கள் உருவாகி வருவதாக அவர் குறிப்பிட்டார். சீனாவுடனான ராணுவ அளவிலான பேச்சு வார்த்தை குறித்துப் பேசிய அவர், இருநாட்டுப் படைகளும் முன்னேக்கி நிறுத்தப்பட்டுள்ளதால், எல்லை ரோந்துப் பணியில் சிக்கல்கள் உள்ளதாக தெரிவித்தார்.

## அட்மிரல் (11)

அட்மிரல் ஆர்.எல். பெரேராவின் நூற்றாண்டு கொண்டாட்டம் டார்ஜிலிங்கில் நடைபெற்றது. அவர் பரம் விஷிஸ்ட் சேவா மற்றும் அதி விஷிஸ்ட் சேவா போன்ற பதக்கங்களை பெற்றுள்ளார். அவரது நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களின் தொடர்ச்சியாக இந்திய கடற்படை மற்றும் டார்ஜிலிங் செயின்ட் ஜோசப் பள்ளி ஆகியவை இணைந்து பள்ளி வளாகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தின. அவரது நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில் கால்பந்தாட்டப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளும் நடத்தப்பட்டு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் கடற்படை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். 800க்கும் மேற்பட்ட மாணவர்களும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## தேர்தல் பத்திரங்கள் (6)

உச்ச நீதிமன்ற பதிவேட்டில் இருந்து டிஜிட்டல் வடிவில் பெறப்பட்ட தேர்தல் பத்திரங்கள் குறித்த தகவல்களை தேர்தல் ஆணையம் இன்று தனது இணையதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது. உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுப்படி அரசியல் கட்சிகள் சீல் வைக்கப்பட்ட கவரில் தேர்தல் பத்திரங்கள் குறித்த விவரங்களை தாக்கல் செய்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

## பிரதமர் 1 (12)

நாட்டில் கடந்த 2014ஆம் ஆண்டிற்கு முன்பு சில நூறுகளாக இருந்த ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் எண்ணிக்கை தற்போது 1.25 லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர் இந்தியாவை உலகின் மிகப்பெரிய

பொருளாதார நாடாக மாற்றுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். நாடுமுழுவதும் 600க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் புரட்சி உருவாக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். இந்தப் புரட்சிக்கு திறமை மிகுந்த இளைஞர்கள் வித்திட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். கிராமங்களில் ஒருபோதும் மிதிவண்டி கூட ஓட்டாத பெண்கள் தற்போது ட்ரோன் விமானிகளாக மாறியிருப்பதாகவும், பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

<u>பிரதமர் 2 (6)</u>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை ஆந்திர மாநிலம், பழநாடு மாவட்டத்தில் நடைபெறும் தேர்தல் பொதுக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசவுள்ளார். தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளான தெலுங்கு தேசம், ஜனசேனா, கட்சித் தலைவர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர். இதற்கிடையே பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை கோவையில் நடைபெறும் சாலை வாகன பேரணியிலும் பங்கேற்க உள்ளார்.

<u>காங்கிரஸ் (9)</u>

மும்பையில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவரான திரு. ராகுல் காந்தி இன்று பங்கேற்றுப் பேசவுள்ளார். இக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான திரு.மு.க.ஸ்டாலின் மும்பை சென்றுள்ளார். காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ், ராஷ்ட்ரிய ஜனதா தள தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ் உள்ளிட்டோரும் இக்கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர். முன்னதாக, திரு. ராகுல்காந்தி மேற்கொண்ட பாரத ஒற்றுமை நீதி யாத்திரை இன்று நிறைவடைகிறது.

ரயில் (6)

சென்னை-திருப்பதி இடையிலான விரைவு ரயில்கள் பராமரிப்பு பணிகள் காரணமாக இன்றும் நாளையும் ரேணிகுண்டா வரை மட்டுமே இயக்கப்படும் என்று தென்னக ரயில்வே அறிவித்துள்ளது. விழுப்புரம் திருப்பதி இடையேயான விரைவு ரயில் சேவை காட்பாடி வரை மட்டுமே இயக்கப்படும் என்றும் தென்னக ரயில்வே அறிவித்துள்ளது.